தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 153/ந/2023
நாள்-05.01.2024

திரு. S. முருகேசன்,
தாராபுரம்,
திருப்பூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
தாராபுரம் நகராட்சி,
திருப்பூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருப்பூர் மாவட்டம், தாராபுரம், எம்.எஸ்.பி.நகர், கதவு எண்.10 என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. முருகேசன் என்பவரின் 13.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.05.2023 அன்று பெறப்பட்டு 153/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருப்பூர் மாவட்டம், தாராபுரம், எம்.எஸ்.பி.நகர், கதவு எண்.10 என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. முருகேசன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“தாராபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்கள் ஆளுமையின் கீழ் உள்ள நகராட்சி பொது வீதியில் கீழ்க்கண்ட மனைப்பிரிவு உரிமையாளர்கள் ஆக்கிரமிப்பு செய்தும், விதிமீறல் செய்தும் புதியதாக வீடு கட்டி விட்டார்கள். நகராட்சி ஆணையர், ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு பொது வீதி ஆக்கிரமிப்பை அகற்றாமல் இருந்து வருவதால் இம்முறையீடு சமர்ப்பிக்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி பகுதி (சித்ராவுத்தன் பாளையம் க.எண்.182/1B) எல்லீஸ் நகர் அருகில் உள்ள சிவசக்தி நகர் டவுன் சர்வே எண். 5/6A அனுமதியற்ற மனைப்பிரிவு SOLD PLAT FRAME WORK – SPFW / SRDD No.2530/2018 எண் இடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டு தனி மனை வரன்முறை செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் மனைப்பிரிவு

எண்.36, ஆக்கிரமிப்பாளர், நகராட்சி ஆணையாளரின் ந.க.எண்.2554/2022/எப்1 மூலம் தனி மனை வரன்முறைபடுத்தியும் வீடு கட்டுவதற்கு கட்டட உரிமை எண்.36/2022 பெற்றுள்ளார். மேலே கண்டவாறு தனி மனை வரன்முறை படுத்துவதற்கும் கட்டட உரிமம் பெறுவதற்கும் மேற்படி ஆக்கிரமிப்பாளர் தற்போது ஆக்கிரமிப்பு செய்த பொது வீதியை காட்டியுள்ளார். தற்காலத்தில் தன் வீட்டின் முன்பு உள்ள 25 அகலம் லேஅவுட் வீதி தனக்கு மட்டுமே சொந்தம் என்று சட்டத்துக்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்துவிட்டார். நகராட்சி ஆணையாளர் ஆக்கிரமிப்பாளருக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறார்.

மேற்படி வீட்டின் எதிர்புறம் மனைப்பிரிவு எண்.26 இடத்தில் க.எண்.55 வீடு கட்டப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு வீடுகளும் 25 அடி அகல நகராட்சி பொது வீதியில் எதிர் எதிராக அமைந்துள்ளது.

மேற்படி மனைப்பிரிவு எண்.36 மற்றும் கதவு எண்.55 இரண்டு ஆக்கிரமிப்பாளர்கள் தங்கள் வீட்டின் முன்பும் நகராட்சி ஆணையரின் ஆளுமையின் கீழ் உள்ள நகராட்சி பொது வீதியில் 10 அடி அகலம் 10 நீளம் கார், பைக் போன்ற வாகனம் தங்கள் வீட்டிற்கு செல்ல வசதியாக சருக்கு பாதை கான்கிரீட் தளம் அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பொது வீதியில் மண்ணை கொட்டி சாலை உயரபடுத்தி குறுக்கே கற்களை வைத்து தடுத்து பொது மக்கள் பயணிக்க முடியாமல் செய்ததோடு அல்லாமல், பொது வீதியை சேதம் ஏற்படுத்தி விட்டார்கள். பொதுப்பாதை சொத்து சேதம் மேலிடும் குற்றத்திற்கு காவல் துறை நடவடிக்கை எடுக்க புகார் தரப்பட்டு நிலுவையில் உள்ளது.

நகராட்சி ஆணையருக்கு ஆக்கிரமிப்பு பற்றி தகவல் தரப்பட்டது ஆக்கிரமிப்பை அகற்ற எந்த முனைப்பும் காட்டவில்லை. மாற்று வழியாக என்னால் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பொது மக்கள் குறைதீர்வு நாள் 06.03.2023 அன்று குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 133–ன்படி வீதி / பாதை ஆக்கிரமிப்பு அகற்ற மனு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மனுமீது மாவட்ட ஆட்சித் தலைவர் சார்பில் முன்னிலை வகுத்த அதிகாரி அவர்கள் ஆணையரை அங்கு நேரில் வரவழைத்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி மேற்படி அசல் மனுவை ஆணையரிடம் ஒப்படைத்து உரிய அறிக்கை தாக்கல் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் ஆணையர் மேற்படி மனு மீது நாளது தேதி வரையில் எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகிறார். பொது மக்கள் வீதியில் பயணம் செய்ய முடியாது கூடுதல் தூரம் சுற்றி கொண்டு தாராபுரம் நகருக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பலமுறை நகராட்சி ஆணையரை நான் சந்தித்து, மேற்படி பொது வீதி ஆக்கிரமிப்பு அகற்ற வலியுறுத்தினேன். ஆனால் அவர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் மட்டுமே சொல்லி வருகிறார், நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் உண்மையில் ஆணையர் மேற்படி ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறார் என்பதை எனது மனுவை கையாளும் விதத்திலிருந்து அறிய முடியும். மேற்படி மனைப்பிரிவு எண்.36–ன் ஆக்கிரமிப்பாளர்கள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019 மீறி கட்டடம் கட்டி உள்ளார் என்பதும், மேற்படி ஆக்கிரமிப்பாளர்கள் நகராட்சி பொது வீதியில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதும் வெளிப்படையாக நன்கு தெரிகிறது. ஆனால் நகராட்சி

ஆணையாளர் நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருகிறார். நகராட்சி ஆணையாளர் பொது வீதி ஆக்கிரமிப்பு அகற்ற ஏதோ காரணத்தால் முனைப்பு காட்டவில்லை, தற்போதுவரை பொது தொல்லை தொடர்ந்து வருகிறது.

பொதுவீதி நகராட்சிக்கு சொந்தமானது என்பது நகராட்சி ஆணையர் அலுவலக ந.க.எண்.2054/2022 கடிதம் மூலம் அறியதக்கதாக உள்ளது. மேலும் நீண்ட காலமாக அருகில் உள்ள லேஅவுட் குடியிருப்பு வாசிகள், பொது மக்கள் இந்த பொது வீதியை பயன்படுத்தி வந்துள்ளார்கள். கூகுள் மேப் மூலம் பாதை இருந்ததை அறிய முடியும். மேற்படி மனைப்பிரிவில் க.எண்.55 மற்றும் கட்டட உரிமை எண்.36/2022 வீட்டின் உரிமையாளர்கள் தங்கள் வீட்டின் முன் உள்ள 25 அடி அகலம் நகராட்சி பொது வீதியில் குறுக்கே கார் பைக் போன்ற வாகனங்கள் தங்கள் வீட்டிற்கு செல்வதற்கு வசதியாக பொதுவீதியினை ஆக்கிரமிப்பு செய்து கான்கிரீட் சறுக்கு பாதை அமைத்துள்ளார்கள் தங்கள் வீட்டின் முன்பு, வீதியில் மண்ணை கொட்டி வீதியை உயரம் செய்து குறுக்கே கற்களைகளை அடுக்கி அந்த வழியை தடுத்து பொது மக்கள்நடந்துகூட செல்ல முடியாத அளவில் செய்துவிட்டார்கள். ஆக்கிரமிப்பாளர்கள் மின் மீட்டர் பெட்டி கம்பத்தை மேற்படி பொது வீதி நடுவில் நட்டுவைத்து போக்குவரத்து தடைசெய்தார்கள். பொதுமக்கள் புகாராக மின் வாரியத்தில் தெரிவித்து கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு மின் கம்பம் அகற்றப்பட்டது. பொது வீதி ஆக்கிரமிப்பு காரணமாக பொது மக்கள் 1 கி.மீ கூடுதலாக பயணம் செய்ய வேண்டிய நிலை உள்ளது. மேலும் கட்டட உரிமை எண்.36/2022 வீட்டின் பொது வீதி ஆக்கிரமிப்பாளர்கள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகள் 2019 மீறி ஆணையரின் ஆதரவுடன் கட்டடத்தை கட்டி விட்டார்கள் என தெரிகிறது. மனைப்பிரிவு எண்.36 ஆக்கிரமிப்பாளர்கள் தங்கள் வீட்டின் முன்பு பொது வீதி ஆக்கிரமிப்பு செய்ததோடு அல்லாமல் தங்களுக்கு நகராட்சி வழங்கிய அனுமதிப்படி மழைநீர் நீர் வடிகால் வசதிகள் செய்யாமலும், முன்பகுதியில் திறந்தவெளி இடத்தை Setback Distance விடாமலும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகள் 2019 மீறி கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பொது வீதி ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

மேற்படி மனு மீது நாளது தேதி வரையில் ஆணையர் எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருவதால் இம்முறையீட்டு மனுதாரர் மாண்புமிகு முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுவுடன் ஆதரவு ஆவணங்கள் தாக்கல் செய்வதற்கு ஏதுவாக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 76–ன்படி இம்முறையீடு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்கள் கோரிய மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகிறார், சட்டப்படி கடமையை செய்ய தவறியுள்ளார்.

இம்முறையீட்டு மனுவில் சுட்டிக் காட்டப்பட்ட நகராட்சி பொது வீதி ஆக்கிரமிப்பு, விதிகளை மீறி கட்டடம் கட்டப்பட்டது சம்பந்தமாக நகராட்சி அலுவலக பொதுத்தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமை சட்டபடி தனக்கு தகவல்களை கூட தர மறுத்து வருகிறார். இது சம்பந்தமாக தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் குற்ற வழக்கு எண். C.No.1320/D/23 11.04.2023 தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ளது.

நகராட்சி ஆணையாளர் திரு. வெ. ராமர் என்பவர் இம்முறையீட்டு மனுதாரின் பொதுநலம் சார்ந்த எந்த கோரிக்கை மனுவையும் சட்டப்படி கையாளவில்லை, சட்டப்படி செய்ய வேண்டிய கடமையை செய்யாமல் இருந்து வருகிறார்.

ஆகவே தாராபுரம் நகராட்சி எல்லைக்குள் எல்லீஸ் நகர் அருகில் சிவசக்தி நகர் லே அவுட் டில் அனுமதியற்ற மனைப்பிரிவில் மனை எண்.36 மற்றும் க.எண்.55 வீதியின் முன்பு உள்ள ஆக்கிரமிப்பை அகற்றவும், கட்டட விதிகளை மீறி வீடு கட்டியுள்ள கட்டட உரிமை எண்.36/2022 கட்டடத்தின் உரிமத்தை ரத்து செய்தும் சாலை ஆக்கிரமிப்பு செய்த நபர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை எடுக்க காவல் துறை, வருவாய் துறைக்கு அறிக்கை தாக்கல் செய்யவும் தனக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொது ஆவணங்கள், நகல்கள் வழங்க உத்தரவிடவும் நகராட்சி ஆணையர் திரு.வெ.இராமர் என்பவருக்கு எதிராக துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் மாண்புமிகு முறைமன்ற நடுவம், உயர் அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்தும் இன்னும் பிற தக்கதென கருதும் பரிகாரங்களையும் வழங்க முறையீட்டு நான் பணிந்து பிராத்திக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 02.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாராபுரம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

தாராபுரம் நகராட்சி ஆணையாளர் தனது 15.06.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:—

"தாராபுரம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட எல்லீஸ் நகர் அருகில் சிவசக்தி நகர் பொது வீதியில் ஆக்கிரமிப்பு செய்து உள்ளதாகவும், அதனை அகற்ற கோரியும் 06.03.2023 நாளிட்ட மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மற்றும் 07.03.2023 நாளிட்ட மனுவினை நகராட்சியில் நேரிலும் அளித்துள்ளார். அதன் அடிப்படையில் மேற்படி இடத்தில் திரு.S.சிவலிங்கம், திருமதி.ஜீவிதா ஆகியோர்களுக்கு தாராபுரம் நகராட்சி அலுவலக 17.04.2023 நாளிட்ட அறிவிப்பில் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 182(1)ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் திரு.S.சிவலிங்கம், திருமதி.ஜீவிதா ஆகியோர்கள் சாலையின் நடுவே உள்ள மின்கம்பங்களை அகற்றிவிட்டனர். மேலும் திரு.S.சிவலிங்கம், திருமதி.ஜீவிதா ஆகியோர்களுக்கு தாராபுரம் நகராட்சி மூலம் கட்டட உரிமை ஆணை எண்.154/BL/2022/00036, நாள் 13.09.2022—ல் கட்டட அனுமதி வழங்கப்பட்டது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 205 (1) (2)—ன்படி அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. நகர்சார் ஆய்வாளர் அவர்களின் 02.06.2023 நாளிட்ட குறிப்பில் சாலையின் தொடர்ச்சியில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த மண் சாலையை சமன் செய்யும் நோக்கில் மண் கொட்டப்பட்டுள்ளது. தற்போது அவ்விடத்தில் போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் இடையூறாக எந்த ஒரு ஆக்கிரமிப்பும் இல்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்து கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் தாராபுரம் நகராட்சி ஆணையரும் 02.01.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.12.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. இதற்கிடையில் நிர்வாகக் காரணங்களினால் விசாரணை 04.01.2024 அன்று ஒத்திவைக்கப்பட்டது.

(4) மனுதாரர் திரு. S. முருகேசன் 04.01.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சிபகுதி எல்லீஸ் நகர் அருகில் C.R. பாளையம் க.ச.எண்.182/1B, சிவசக்தி நகரில், திரு. சிவலிங்கம், திருமதி. ஜீவிதா மற்றும் திரு. சண்முகம் தங்களுக்கு சொந்தமான 36 எண் மனை இடத்தில் தாராபுரம் நகராட்சி ஆணையாளரிடம் கட்டட உரிமம் பெற்று கடந்த ஆண்டு 2023–ல் வீடு கட்டி உள்ளார்கள். மேற்படி வீடு கட்டும் போது 16.02.2023 மற்றும் 02.03.2023 தேதிகளில் மேற்படி நபர்கள் தங்களது வீட்டின் முன்பு நகராட்சி பொது சாலையை ஆக்கிரமிப்பு செய்து மண் மேடு செய்து விட்டார்கள். அதற்கு முன்னரே 10 அடி அகலத்தில் கான்கிரீட் சறுக்கு பாதை தளம் அமைத்துவிட்டார்கள். மேலும், தங்கள் வீட்டு கழிவுநீரை பூமியின் உள்ளே செலுத்த ஏதுவாக உறுஞ்சுக் குழி 10 அடி அழத்தில் பொது சாலையை தோண்டி பூமிக்குள் கட்டிவிட்டார்கள். நகராட்சி வழங்கியுள்ள கட்டட உரிமத்தின் நிபந்தனைகளை அப்பட்டமாக மீறியதோடு தங்களது வீட்டின் முன்பு சாலை ஆக்கிரமிப்பு செய்தும் மழைநீர் அமைப்பு ஏற்படுத்தாமலும் கட்டட அனுமதிபடி போதிய இடைவெளி விடாமலும் (Set back) வீடுகட்டி முடித்து விட்டார்கள். மேற்படியார்கள் எதிர் வீட்டில் வசித்து வரும் க.எண்.55 திரு. கணேசன் என்பவரும் தன் வீட்டுக்கு முன்பு கான்கிரீட் சறுக்கு தளத்தை பொது சாலையில், அரைபகுதியை ஆக்கிரமித்து ஏற்கனவே கட்டிஉள்ளார். மீதி அரைபகுதி சாலையில் ம.எண்.36 திரு. சிவலிங்கம் குடும்பத்தார் சறுக்கு பாதை அமைத்து ஆக்கிரமிப்பு செய்து கட்டிவிட்டார்கள்.

2) மனை எண்.36 வீடானது தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019–ஐ பின்பற்றாமலும் நகராட்சி இயக்குநரகத்தின் 25.08.2022 தேதிய சுற்றறிக்கையை பின்பற்றாமலும் நகராட்சி ஆணையரின் கட்டட அனுமதி நிபந்தனைகளை பின்பற்றாமலும் அப்பட்டமாக விதிமீறல்கள் செய்து கட்டடம் கட்டப்பட்டதோடு அல்லாமல் நகராட்சி பொது சாலையை ஆக்கிரமித்து சாலை தடுப்பு ஏற்படுத்தி போக்குவரத்து தடை செய்து கட்டியுள்ளார்கள். பொது தொல்லை நீங்க நடவடிக்கை வேண்டி மனு நகராட்சி ஆணையருக்கு 17.02.2023–ந் தேதி நேரில் அளிக்கப்பட்டது. ஈமெயில் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டது. (ஆவண எண்.1) மேற்படி மனு மீது நகராட்சி ஆணையாளர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே மாவட்ட ஆட்சி தலைவருக்கு 06.06.2023–ம் தேதி குறைதீர் நாளில் மனு நேரில் சமர்ப்பிக்கப்பட்டது. அதுசமயம் நேரில் முன்னிலையான நகராட்சி ஆணையாளர் திரு.வெ.ராமர் அவர்கள் ஆக்கிரமிப்பு விரைவில் அகற்றப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் சார்பில் விசாரணை செய்த அதிகாரி முன்னிலையில் தெரிவித்தார். ஆனால் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு சாலை ஆக்கிரமிப்பு தடுப்பு அகற்றாமல் இருந்து வந்தார். கடந்த சிலமாதங்கள் முன்பு பணி இடமாறுதல் ஆகிவிட்டார். தற்போது உள்ள நகராட்சி ஆணையாளர் அவர்களும் மேற்படி பொது தொல்லை ஆக்கிரமிப்பை அகற்ற ஆர்வம்

காட்டாமல் மற்றும் கண்டு கொள்ளாமல் தட்டிக்கழித்து வருகிறார். பொது தொல்லை 10 மாதங்களாக தொடர்ந்து இருந்து வருகிறது. பொது நலம் மேலோங்கியே இம்முறையீட்டு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என பணிந்து உறுதி பட தெரிவிக்கிறார்.

<u>வாதங்கள் விரிவாக்கம்</u>

மேற்படி வீடு சாலையில் ஆக்கிரமிப்பு செய்த சாலையை தடுத்து கட்டப்பட்டபோதே நகராட்சி ஆணையாளர் அறிவிப்பு கொடுத்து தடுத்து நிறுத்தியிருக்க கடமைபட்டவர் ஆவார் பொது தொல்லை நீக்க நேரில் மனு அளித்தும் ஈமெயில் மூலமாக தெரிவிக்கப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆக்கிரமிப்பு அகற்ற ஆர்வம் காட்டவில்லை. ஆக்கிரமிப்பாளர்கள் தங்கள் வீட்டுக்கு முன்பு உள்ள 25 அடி அகலமான நகராட்சி சாலையில் கழிவு நீர் உறுஞ்சும் கான்கிரீட் ரிங் சாலை ஓரத்தில் இறக்கி சாலை நடுவில் மண்ணை கொட்டி குறுக்கே கற்களை வைத்து பொது மக்கள் போக்குவரத்துக்கு பயன்படத்த முடியாதபடி (16.02.2023) மண்ணை கொட்டியும் (02.03.2023) கற்களை சாலையில் குறுக்கே வைத்து சாலை முழுவதையும் (Road Blockage) செய்துவிட்டார்கள். 55 க.எண். உள்ள எதிர்வீட்டில் வசித்து வரும் திரு. K.கணேசன் (காவல் உதவி ஆய்வாளர் பணி ஓய்வு) Road Blockage வேலையை முன் நின்று செய்து அந்த வழியில் பொதுமக்கள் செல்லவிடாமல் தடுத்து திருப்பி அனுப்பி வருகிறார். அந்த சாலையை எவரும் கடந்த செல்லவிடாமல் காவல் காத்தும் வருகிறார். ஆக்கிரமிப்பாளர்கள் சாலை தடுத்து ஆக்கிரமிப்பு செய்தது இ.த.ச. பிரிவு 431–ன்படி குற்றம் மேலிடுகிறது நகராட்சி ஆணையாளர் காவல் நிலையத்தில் புகார் தரவும் முன் வரவில்லை. இத்துடன் தாக்கல் செய்யப்படும் போட்டோக்கள் மூலம் சாலை தடைகள் ஏற்படுத்திதை அறிய முடியும். மேற்படி சாலை ஆக்கிரமிப்பு சாலை தடுப்பு காரணமாக இம்மனுதார் உட்பட பொது மக்கள் மற்றும் அந்த பகுதியில் குடிமிருப்பு வாசிகள் சுமார் 1 கி.மீ. மேல் சுற்றி கொண்டு கூடுதலாக பயணம் செய்ய வேண்டிய அளவில் சிரமம் ஏற்படுத்தியுள்ளார்கள். பல்வேறு தேதிகளில் எடுக்கப்பட்ட போட்டோக்கள் மூலம் உண்மை நிலையை அறியமுடியும். சாலை தடை விதிமீறல் ஆக்கிரமிப்பு கட்டடம் கட்டியதற்கு நடவடிக்கை எடுக்க கடமைப்பட்ட அப்போதைய நகராட்சி ஆணையாளர் திரு.வெ.ராமர் அவர்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக செயல்பட்டார் தற்போதைய நகராட்சி ஆணையாளரும் மேற்படி பொது தொல்லை அகற்ற முனைப்பு ஆர்வம் காட்டவில்லை என்பதாலும் Road blockage பொது தொல்லை இன்றுவரை தொடர்ந்து இருந்து வருகிறது. அவ்வப்போது இம்முறையீட்டுதாரரால் எடுக்கப்பட்ட போட்டோக்கள் உண்மை நிலையை அறிய தகுந்த ஆவண சாட்சியாக உள்ளது. பல்வேறு தேதிகளில் எடுக்கப்பட்ட போட்டோக்களின் நகல்கள் இம்முறையீட்டு மனுதாரரால் இந்திய சாட்சிய சட்டம் 65பி படி சான்றிட்டு இம்முறைமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது.

2) பொது தொல்லை சாலை தடுப்பு உடனடியாக சரிசெய்ய வேண்டியது ஆகும். ஆனால் பல மாதங்கள் ஆகியும் தொடர்வதால் தன்னார்வ நுகர்வோர் விழிப்புணர்வு அமைப்பு மூலம் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு சாலை தடையை நீக்கிட நடவடிக்கை வேண்டி மனு அனுப்பிவைக்கப்பட்டும் நேரிலும் வலியுறுத்தப்பட்டும். நகராட்சி ஆணையாளர் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்றும் பொது மக்கள் இடையூறு இன்றி போக்குவரத்துக்குக்கு பாதையை

பயன்படுத்தி வருவதாகவும் 01.06.2023 தேதியிட்ட அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநருக்கும் அனுப்பிவைத்துள்ளார். நகராட்சி ஆணையாளரின் அறிக்கை உண்மைக்கு புறம்பானது பொய்யானது மாண்பமை முறையீட்டு மன்றத்திலும் மேற்படி அறிக்கை தாக்கல் செய்வதை இம்முறையீட்டு மனுதாரர் கடுமையாக ஆட்சேபனை செய்கிறார். மேற்படி அறிக்கையில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு நகராட்சி ஆணையாளர் அறிவிப்பு அனுப்பி உள்ளதாக தெரிவிக்கிறார். அறிக்கை பொய்யானது என போட்டோ ஆதாரங்களை முன் வைத்து நுகர்வோர் விழிப்புணர்வு மையத்தின் சார்பில் சுட்டிக் காட்டப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் சார்பில் 27.10.2023 ம் தேதி கலந்தாய்வு கூட்டத்தில் நகராட்சி ஆணையாளர் சார்பில் ஆஜரான தாராபுரம் நகராட்சி அலுவலக உதவியாளர் திரு. லோகநாதன் என்பவர் 10 நாட்களில் ஆக்கிரமிப்பு சாலை தடை அகற்றப்படும் என தெரிவித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் 27.11.2023 தேதிக்கு முன்பு இக்கோரிக்கை மீது உரிய நடவடிக்கை எடுத்து அதன் விபரத்தை நுகர்வோர் அமைப்பிற்கு அனுப்பி வைக்க பணித்துள்ளார். ஆனால் இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆக்கிரமிப்பு சாலை தடை அகற்றப்படவில்லை. இதனை உறுதிபடுத்த இப்பிரச்சினைகுரிய இடத்தில் எடுக்கப்பட்ட போட்டோ மூலம் அறிய முடியும். நகராட்சி ஆணையாளர் முறைமன்ற நடுவத்தில் விசாரணையின்போது பிரச்சினைக்குரிய இடத்தின் போட்டோ நகலை சமர்ப்பிக்க வேண்டும் என முறையீட்டு மனுதாரர் பணிந்து வலியுறுத்துகிறார். நகராட்சி ஆணையாளர் 21.06.2023ம் தேதியிட்ட அறிக்கையில் வீட்டு உரிமையாளர்கள் / சாலை ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி வைத்துள்ளார். அதன்படி மின்கம்பம் அகற்றப்பட்டதாக அப்பட்டமான பொய்அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ஆக்கிரமிப்பு சாலையின் நடுவில் இருந்த மின்கம்பம் குறித்து, பொதுமக்கள் மின்சார வாரியத்தில் புகார் செய்து அதன்படி மேற்படி அறிவிப்பிற்கு முன்னரே மின் மீட்டர் பெட்டி கம்பம் அகற்றப்பட்டதை. போட்டோகள் மூலம் அறிய முடியும். மேலும் ஆக்கிரமிப்பு சாலையில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்று பொய்யான அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநருக்கு 01.06.2023ம் தேதிய அறிக்கையை ஆ.எண்.8 அனுப்பி வைத்துள்ளார். நகராட்சி ஆணையாளரின் 01.06.2023ம் தேதிய அறிக்கை முன்பும் பின்பும் இம்முறையீட்டு மனுதாரர் செல்போனில் எடுக்கப்பட்ட போட்டோக்கள் மூலம் ஆக்கிரமிப்பு மற்றும் Road Blockage –க்கு 04.01.2023 முதல் 02.01.2024 தேதி வரை எடுக்கப்பட்ட சான்று அளிக்கப்பட்ட போட்டோக்கள் சான்று ஆவணங்களாகும் அதன் மூலமாக முறையீடு உண்மை என நிருபிக்கப்படுகிறது. நகராட்சி ஆணையாளர் கடமையை செய்ய தவறியதோடு மட்டுமல்லாது உயர் அதிகாரிகளுக்கு பொய்யான அறிக்கையை தாக்கல் செய்ததன் மூலம் குற்றம் செய்தவர் ஆகிறார். பொதுமக்கள் பொதுபாதையை சட்டபடி பயன்படுத்த முடியாதவாறு செய்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு துணை செய்துள்ளார் என்பது உறுதியாகிறது.

ஆகவே முறையீட்டு மனுதாரர் மனுவில் கோரிய பரிகாரம் கிடைக்கும்படி உத்தரவு பிறப்பிக்க பணிந்து வேண்டப்படுகிறது" என சமர்ப்பித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான தாராபுரம் நகராட்சி ஆணையர் திருமதி.ரூ.மு.பாரிஜான் என்பவர் 04.01.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள தாராபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட எல்லீஸ் நகர் அருகில் சிவசக்தி நகரில் சாலையை ஆக்கிரமித்து மின் கம்பம் நடப்பட்டதைத் தொடர்ந்து திரு. எஸ். சிவலிங்கம் மற்றும் திருமதி ஜீவிதா ஆகிய இருவருக்கும் 1920 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 182(1) ன் கீழ் 17.4.2023 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதனையொட்டி மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்து நடப்பட்ட மின் கம்பம் அகற்றப்பட்டுவிட்டது. மேலும் அங்குள்ள சாலையில் குவிக்கப்பட்டிருந்த மண் குவியல் அகற்றப்பட்டு சாலை சமமாக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது அங்கு நகராட்சிக்கு சொந்தமான பாதை ஏதும் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட திரு. எஸ். சிவலிங்கம் மற்றும் திருமதி. ஜீவிதா ஆகியோருக்கு, அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள அவர்களது கட்டடத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் 1920 பிரிவு 205 (1) (2)ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர் நடவடிக்கையாக Lock and Seal Notice மற்றும் Demolition Notice ஒரு மாத காலத்திற்குள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 2.01.2024 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) தாராபுரம் நகராட்சி ஆணையாளர் திருமதி. ரூ.மு.பாரிஜான் என்பவர் தனது 02.01.2024 நாளிட்ட கூடுதல் அறிக்கையை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் திரு.முருகேசன் என்பவர் தனது 06.03.2023 மற்றும் 07.03.2023 நாளிட்ட மனுக்களில் தாராபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட எல்லீஸ் நகர் அருகில் சிவசக்தி நகர் பொது வீதியில் ஆக்கிரமிப்பு செய்து உள்ளதாகவும், அதனை அகற்ற கோரியும் மனு அளித்துள்ளார். அதன் அடிப்படையில் மேற்படி இடத்தில் திரு. S.சிவலிங்கம் திருமதி. ஜீவிதா ஆகியோருக்கு 17.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 182 (1)ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் திரு. S.சிவலிங்கம் திருமதி. ஜீவிதா ஆகியோர் சாலையின் நடுவே உள்ள மின்கம்பங்களை அகற்றிவிட்டனர். மேலும் திரு. S.சிவலிங்கம் திருமதி. ஜீவிதா ஆகியோருக்கு தாராபுரம் நகராட்சி மூலம் கட்டட உரிமை ஆணை எண்.154/BL/2022/00036, நாள் 13.09.2022–ல் கட்டட அனுமதி வழங்கப்பட்டது, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 205 (1), (2)–ன்படி, அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. 02.06.2023 நாளிட்ட நகரசார் ஆய்வாளர் அவர்களின் குறிப்பில் சாலையின் தொடர்ச்சியில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த மண் சாலையை சமன் செய்யும் நோக்கில் மண் கொட்டப்பட்டுள்ளது.

மேலும் 26.12.2023 நாளிட்ட மனுவில் திரு. S.சிவலிங்கம் திருமதி. ஜீவிதா ஆகியோர் தங்களது வீட்டின் முன்புறம் ஆக்கிரமிப்பு உள்ளதாக கோரி திரு.முருகேசன் என்பவர் தொடர்ந்து தொந்தரவு செய்து வருவதாக தெரிவித்துள்ளர். இதனடிப்படையில் நகராட்சி ஆணையாளரால் நேரடி ஆய்வு செய்யப்பட்டத்தில் வார்டு எண்.7, பிளாக் எண்.1 நகரளவு எண். 5/6A1 Part–ல் சாலையின் தொடர்ச்சியில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை, மேலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சேலம் அவர்களின் (Sold Plot frame work SPFW No. 2530/2018) வரன்முறைப்படுத்துதல் திட்டத்தில் அமைகிறது. அவ்விடத்தில் போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் இடையூறாக எந்த ஒரு ஆக்கிரமிப்பும் இல்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்து கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் தாராபுரம் நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தை சேர்ந்த மனுதாரர் திரு.S.முருகேசன் என்பவர் தனது 13.05.2023 நாளிட்ட மனுவில், தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட எல்லீஸ் நகர் அருகில் சிவசக்தி நகர் அனுமதியற்ற மனைப்பிரிவில் மனைப்பிரிவு எண்.36 மற்றும் கதவு எண்.55–ல் உள்ள மனை உரிமையாளர்கள் பொது வீதியினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதையும் மற்றும் கட்டட உரிமை எண்.36/2022ல் விதிமீறி கட்டடம் கட்டியுள்ளதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட சிவசக்தி நகர், வார்டு எண்.7, பிளாக் எண்.1, நகரளவு எண்.5/6A1 இடத்திற்கு முன்புறமாக அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான பொது வீதியில் மனை எண்.36–ல் வசிக்கும் திரு. S.சிவலிங்கம் மற்றும் திருமதி. ஜீவிதா என்பவர்கள் உயரமாக மண்ணை கொட்டி, ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக மனுதாரரின் 07.03.2023 நாளிட்ட புகார் மனு நகராட்சியில் பெறப்பட்டதும், மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றக் கோரி நகராட்சி ஆணையரால் 1920 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 182 (1)–ன் கீழ் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு, அதனடிப்படையில் ஆக்கிரமிப்பாளர்கள் பொது வீதியில் ஏற்படுத்திய ஆக்கிரமிப்பினை அகற்றி பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் எவ்வித இடையூறுமின்றி மண் சாலையை சமன் செய்துள்ளனர். இதனை நகர்சார் ஆய்வாளர் களஆய்வு செய்து சாலை ஆக்கிரமிப்பு இல்லாதிருப்பதை உறுதி செய்துள்ளார். நகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ள புகைப்படங்களும் இதற்கு ஆதாரமாக உள்ளது.

இருப்பினும் ஆக்கிரமிப்பு தொடர்பாக புகார் வரப்பெற்றபின் நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்து, தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான பொது சாலைகள், பூங்காக்கள், திறந்தவெளிகள் ஆகியவற்றை அவ்வப்போது நகராட்சியின் களப்பணியாளர்களின் மூலம் ஆய்வு செய்து, ஆக்கிரமிப்பு இருப்பின் அதனைக் களைவதற்கான நடவடிக்கை எடுப்பதன் மூலம் நகராட்சிக்கும் மற்றும் அரசுக்கும் அவப்பெயர் ஏற்படாதிருக்கும் என்பதால் கடமை உணர்ச்சியுடனும், பொறுப்புடனும் செயலாற்றிட தாராபுரம் நகராட்சி ஆணையாளரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

மேலும், தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட சிவசக்தி நகரில் மனை எண்.36–ல் நகராட்சி கட்டட உரிமை எண்.154/BL/2022/00036 நாள் 13.09.2022–ல் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டதற்கு மாறாக விதிமீறி கட்டடம் கட்டப்பட்டு வருவது தொடர்பான புகார் மனு நகராட்சியில் பெறப்பட்டதும் அனுமதியற்ற கட்டுமான கட்டடத்திற்கு தாராபுரம் நகராட்சி மூலம் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு

205 (1) (2)–ன்படி 24.04.2023 நாளிட்ட அறிவிப்பு மட்டுமே கட்டட உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர் நடவடிக்கையாக 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 56, 57 மற்றும் 80 (A)ன் கீழ் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்தினை பூட்டி சீல் வைத்தல் போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படாத செயலானது தாராபுரம் நகராட்சி ஆணையாளர், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் பணியில் மெத்தனப்போக்கு மற்றும் பொறுப்பற்ற செயலையே காட்டுகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.07 நாள் 10.01.2023–ல் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 56, 57 மற்றும் 80 (A)–ன் கீழ் அனுமதியற்ற அபிவிருத்திகள் மீதான அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் வழிமுறைப்படுத்துதலுக்கான விதிகளை பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு 45 நாட்களுக்குள் அனுப்பி வைத்திடுமாறு தாராபுரம் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இதில் எவ்வித தாமதமும் ஏற்படக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S. முருகேசன்,
கதவு எண். 10, எஸ்.பி.நகர்,
தாராபுரம், திருப்பூர் மாவட்டம் – 638656.

2) ஆணையாளர்,
தாராபுரம் நகராட்சி,
திருப்பூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

05/01/24